ஆண்டு இடைநிலை ஆசிரியர்களை நியமித்து கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கக்கூடிய இடைநிலை ஆசிரியர்கள் 50 சதவீதம் பேர். இப்போது மாநில முன்னுரிமைப் பட்டியலில் வரக்கூடிய காரணத்திலேதான் தென் மாவட்டங்களிலிருந்து வரக்கூடியவர்கள் வெவ்வேறு பணியிடங்களிலே இருக்கக்கூடியவர்கள் அந்தப் பணியிலே சேராமல் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிந்து, அவர்கள் அந்தப் பணியிடங்களில் சேரவில்லையென்று சொன்னால், அந்தக் காலிப் பணியிடங்களில் மிக விரைவிலே ஆசிரியர்களை நிரப்புவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறது. தமிழாசிரியர் பணியிடங்களைப் பற்றிக்கூட உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலேதான் 2006 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ B.T. தமிழ் என்று எடுத்துக்கொண்டால் 1,063 பேர் இப்போது T.R.B. மூலமாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். 246 பேர் இன்னும் மிக விரைவிலே தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள். எனவே, தமிழாசிரியர் பணியிடங்கள் எங்கேயெல்லாம் தேவையாக இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அவர்களை இப்போதைக்கு 66 சதவீதம் பதவி உயர்வின் மூலமாகவும், 34 சதவீதம் நேரடி நியமனங்கள் மூலமாகவும் தொடர்ந்து அந்தப் பணியிடங்களில் நிரப்பக்கூடிய பொறுப்பை அரசு செவ்வனே செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

8—

பாலம்

***48901—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரிலிருந்து காட்பாடி செல்லும் வழியில் பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 5]

வேலூர் நகரத்திலிருந்து காட்பாடி செல்லும் வழியில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு மைய அரசின் மாநிலங்களை இணைக்கும் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.16.01 கோடி மதிப்பில் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் நிறைவடையும் சூழ்நிலை இருக்கிறது. இந்த மாத இறுதிக்குள் அந்தப் பாலம் மக்களுடைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பாலம் 1996 ஆம் ஆண்டு பெருத்த மழை வந்தபோது ஐந்து கண்கள் உடைபட்டுப்போன பழைய பாலம். அதுதான் இப்போது பல மாநிலங்களை இணைக்கக்கூடிய ஒரு சாலையாக, நிதி ஒதுக்கப்பட்டு முடிக்கும் தருவாயில் இருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நான் கேட்பது, இப்பொழுது மாநகராட்சியாக மாறிவிட்ட வேலூரில் ஜனத்தொகை ஏராள மாக வந்த பின்னால் இப்போது இருக்கக்கூடிய இரண்டு பாலங்களும் போதவில்லை. ஆகவே, கடந்த 10 ஆண்டுகளாக ரூ.19.25 கோடியில் நபார்டோ அல்லது நீங்கள் வேறு நிதியாதாரத்தைப் பெற்றாவது காட்பாடிக்கு, சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குப் பின்னால் இருந்து காட்பாடிக்கு-காங்கேயநல்லூர் வழியாகச் செல்லக்கூடிய ஒரு பாலத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு, பல ஆண்டுகளாகப் பரிசீலனையில் இருக்கிறது. சென்ற ஆண்டுகூட நீங்கள் அதை நபார்டில் இணைத்தீர்கள். ஆனால், இதுவரை அந்தப் பாலம் வரவில்லை. இப்பொழுது நீங்கள் குறிப்பிடுகிற பாலம் பழைய பாலம். அந்தப் பழைய பாலத்தைத்தான் இப்போது புதிய பாலமாக உருவாக்கியிருக்கிறீர்கள். புதிய பாலத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, இந்த ஆண்டு ரூ.19.25 கோடிக்கு சத்துவாச்சாரி-காங்கேயநல்லூரை இணைக்கக்கூடிய பாலத்தை உடனடியாக அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரிலிருந்து காட்பாடி வழியாக பாலாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதுதான் எனக்குத் தரப்பட்ட வினா. அந்த அடிப்படையில்தான் நானும் துறையின் சார்பாக பதிலை அளித்திருக்கிறேன். நான்கூட ஆச்சரியப்பட்டேன். சத்துவாச்சாரியை விட்டுவிட்டு, வேலூரைப் பற்றிக் கேட்டிருக்கிறாரே என்று. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல, காங்கேயநல்லூரையும், சத்துவாச்சாரியையும் இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நபார்டு வங்கியினுடைய அனுமதிக்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியைப் பெற்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலைமைக்கு ஏற்ப நபார்டு வங்கியினுடைய அனுமதி கிடைத்தால் இந்தப் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கக்கூடிய ஒரு பாலத்தில் சில நேரங்களிலே ஒரு சிறு விபத்து ஏற்பட்டாலும்கூட 6 மணி நேரம் போக்குவரத்து நின்று போய் நாங்கள் பெரிய அவஸ்தைக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் இன்னொரு பாலத்தைக் கட்டித்தர வேண்டும். இப்பொழுது காட்பாடியையும், வேலூரையும் மாநகராட்சியாகத் தரம் உயர்த்திவிட்ட பின்னால், நிறைய வணிக நிறுவனங்கள், அதேபோல பொற்கோயில், V.I.T. பல்கலைக்கழகம் என்று எங்களுடைய வேலூர் நிறைய floating population வரக்கூடிய ஒரு இடமாக வந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே இன்னொரு பாலம் மிக, மிக அவசியம். 10 ஆண்டுகளுக்கு மேலாக முன்மொழிவுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் ஒரு சிறப்பு நிகழ்வாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நிதியைப் பெற்று எப்படியாவது இந்த ஆண்டு இந்தப் பணி துவக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே வினாவிற்கான விடையிலே குறிப்பிட்டதுபோல, காட்பாடி நகரையும், வேலூர் நகரையும் இணைக்கக்கூடிய வகையிலே பாலாற்றின் குறுக்கே சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பிலே கட்டி முடிக்கப்பட்டிருக்கிற பாலம் பயன்பாட்டிற்கு விரைவில் வர இருக்கிறது. அதேபோல, ஏற்கெனவே 1975 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது, கட்டப்பட்ட பாலம் இன்னும் நல்ல முறையிலே பயன்பாட்டில் இருக்கிறது. எனவே, மிக அருகிலேயே இந்த இரண்டு பாலங்கள்—உயர்மட்டப் பாலங்கள் அமைந்திருக்கின்றன. அதே நேரத்திலே இன்னும் இரண்டு கிலோ மீட்டர் தூரம் தள்ளித்தான் இன்னொரு உயர்மட்டப் பாலம் கேட்கிறார். எனவே, அப்பாலத்தினைக் கட்டுவதற்கு நபார்டு வங்கியினுடைய அனுமதிக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு துறைக்கும் நபார்டு வங்கியினுடைய அனுமதி பகிர்ந்தளிக்கப்படுகிற நேரத்திலே நெடுஞ்சாலைத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிற பாலப் பட்டியல் ஏறத்தாழ 250 கோடி ரூபாய்க்கு அனுப்பியுள்ளோம். முதலில் 400 கோடி ரூபாய்க்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று நபார்டு வங்கிக்கு அனுப்பினோம். நிதி நிலைமை சரியாக இல்லை, குறைத்து அனுப்புங்கள் என்று கூறினார்கள். நாங்கள் மீண்டும் குறைத்து 250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நபார்டு வங்கிக்கு பல பாலங்களைக் கேட்டு அனுப்பியிருக்கிறோம். ஏறத்தாழ வேலூர் மாவட்டத்திற்கு மட்டும் 4, 5 பாலங்கள் இடம் பெற்றிருக்கின்றன. எனவே, அந்த அனுமதி கிடைக்கும்பட்சத்தில் மாநில அரசின் பங்குத் தொகையைச் செலுத்தி, நிச்சயமாக அந்தப் பாலம் கட்டுவதற்கு அரசு தொடர்ந்து பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, தாந்தோணி ஒன்றியத்திற்கு உட்பட்ட கொடுவம்பள்ளி ஊராட்சி மற்றும் கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நெரூர், சோமூர் ஊராட்சிப் பகுதி மக்கள் எளிதிலே கரூர்-திருச்சி தேசிய நெடுஞ்சாலையை அடைகின்ற விதத்திலே அமராவதி ஆற்றின் குறுக்கே கோயம்பள்ளி-மேலப்பாளையம் இடையே புதிய பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளகோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கருத்தில் கொண்டு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரம் இப்பொழுது பெரிய மாநகரமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. பாத்திமா கல்லூரியையும், மதுரை மாநகரையும் இணைக்கின்ற வகையிலே சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட பாலம்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்பொழுது போக்குவரத்து நெருக்கடியைக் கருத்தில்கொண்டு அந்தப் பாலத்தை இரட்டைப் பாலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுதுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக அது குறித்து அரசு பரிசீலித்து, தேவைப்படுமானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***106089—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS